

திருவெறும்பூர் காட்டூர் பகுதியில் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டத்தில் அமைச்சர்கள் சு.முத்துசாமி, அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறப்புரையாற்றினர். கழக முன்னணியினர் கலந்துகொண்டனர்.

## திருவெறும்பூர் காட்டூர் பகுதியில்

# கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம்!

### அமைச்சர்கள் சு.முத்துசாமி - அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறப்புரை!

திருவெறும்பூர், அக். 19-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக் கூட்டம் தமிழக முன்னாள் முதல்வரும் தி.மு.க. கட்சியின் முன்னாள் தலைவருமான மக்கள் மனதில் நீண்ட இடம் கொண்டிருக்கும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் பொதுக்கூட்டம் காட்டூர் பகுதி கழகத்தின் சார்பாக நடைபெற்றது.

மேலும் இந்த பொதுக் கூட்டத்திற்கு காட்டூர் பகுதி கழக செயலாளர் நீலமேகம் தலைமை வகித்தார் மேலும் இந்த பொதுக் கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளரும் தமிழக பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி மற்றும் தமிழக வீட்டு வசதி துறை மற்றும் மதுவிலக்கு ஆயத் தீர்வை துறை அமைச்சர் - ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளர் முத்துசாமி ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர்.

மேலும் இந்த பொதுக் கூட்டத்தில் பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியதாவது:-

காட்டூர் பகுதி கழக செயலாளர் நீலமேகம் அவர்கள் தனது சிறிய வயது முதல் இன்றைய காலம் வரை கழகத்திற்காக சுழன்று உழைத்து வருகிறார் என்றும்

ஆகவே அவர் முப்பெரும் விழாவில் தமிழக முதல்வர் கையால் சிறந்த பகுதி செயலாளர் மற்றும் சிறந்த மாநகராட்சி கவுன்சிலர் என்ற விருதை பெற்றமைக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் இந்த சிறப்பான கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ள பகுதி செயலாளர் மற்றும் வட்ட செயலாளர்களுக்கு எனது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் மேலும் இந்த காட்டூர் பகுதி கலைஞரின் முப்பெரும் விழா கூட்டத்திற்கு யாரை அழைக்க வேண்டும் என்ற போது தமிழக அமைச்சரவையில் ஒரு திட்டமிடலோடு ஒரு மனிதன் எப்படி இருக்க வேண்டும் என்று இளைய அரசியல்வாதிகளுக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்கக் கூடியவர் யார் என்று கூறினால் அண்ணன் முத்துசாமியை தான் அழைக்க வேண்டும் என்று இந்த கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக அவரை அழைத்து உள்ளதாகவும் அவர் வருகை புரிந்தமைக்கு தெற்குமாவட்ட கழகம் சார்பில் அவரை வரவேற்பதில் பெருமை கொள்வதாகவும் கூறினார்

மேலும் மாநாடாக இருந்தாலும் சரி ஒரு பொதுகூட்டமாக இருந்தாலும் சரி அமைச்சர் முத்துசாமி அவர்கள் சிறப்பாக செய்து காட்டுவார் என்பதற்கு ஈரோடு இடைத்தேர்தலே எடுத்துக்காட்டு என்றும் கூறினார்.

மேலும் கலைஞர் நூற்றாண்டு விழாவில் ஒரு சிறிய நினைவூட்டலை கூற விரும்புவதாகவும் 1938 ஆம் ஆண்டு கலைஞர் தனது பள்ளிகள் இரண்டாம் படிவம் திருவாரூரில் படித்து வரும் பொழுது ராஜாஜி அவர்கள் இந்தியை கட்டாயம் திணிக்கும் திட்டத்தை கொண்டு வந்த பொழுது தனது 14 வயதில் அங்குள்ள மாணவர்களை ஒன்றாக திரட்டி இந்தி எதிர்ப்புக்கென ஒரு படிவத்தை தயார் செய்து அனைவரிடமும் வழங்கிக் கொண்டிருந்தார் கலைஞர் அப்பொழுது பள்ளியின் இந்தி ஆசிரியர் வந்து கொண்டிருந்த பொழுது அவரிடமும் அந்த படிவத்தை வழங்கியிருந்தார் அதை வாங்கிக் கொண்ட இந்தி ஆசிரியர் மறுநாள் பள்ளியில் உள்ள எழுத்து பலகையில் இந்திய எழுதி கலைஞரை இதை படி என்று கூறிய போது கலைஞர் அதைப் படிக்க மறுத்து விட்டார் உடனடியாக அந்த இந்தி ஆசிரியர் கலைஞரின் கன்னத்தில் ஓங்கி அறைந்தார்.

இதை மனதில் வைத்துக் கொண்ட கலைஞர் பின்பு தமிழக அரசின் பொதுப்பணித்துறை அமைச்சராக பொறுப் பேற்றவுடன்திருவாரூருக்கு ஒரு நிகழ்ச்சிக்காக சென்றிருந்தார் அப்பொழுது கலைஞரின் கன்னத்தில் அலைந்த அந்த ஆசிரியர் ஒரு சித்த வைத்திய சாலையில் பணியாற்றிக் கொண்டிருந்த அந்த ஆசிரியர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களை பொதுப் பணித்துறை அமைச்சர் என்று வரவேற்ற பொழுது கலைஞர் தனது கன்னத்தை தடவி அந்த ஆசிரியருக்கு நினைவூட்டினார்

எனவே கலைஞர் அவர்கள் அறிஞர் அண்ணாவின் வழியில் ஆங்கிலத்தையும் தமிழையும் தூக்கிப் பிடித்த ஒரு தலைவர் என்றால் அது கலைஞர் தான் என்றும் கூறினார் மேலும் இன்றைய தமிழக முதல்வர் மக்களுக்காக பல்வேறு திட்டங்களை செய்து வருவதாகவும் எனவே வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நாடும் நமதே நாற்பதும் நமதே அனைத்து தொகுதிகளிலும் வென்று முதல்வரின் கரத்தை வலுப்பெற வேண்டும் எனவும் கூறினார்.

மேலும் அமைச்சர் முத்துசாமி பேசுகையில் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவில் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதில் நான் பெருமைப்படுவதாகவும் இந்த திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினரும் பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தனது முதல் பட்ஜெட் கூட்ட தொடரிலேயே எந்த ஒரு குறிப்பு இல்லாமல் தனது திட்டத்தை பற்றி விரிவாக எடுத்துரைத்தது அனைத்து அமைச்சர்களுக்கும் வியப்பாக இருந்ததாகவும் தமிழக முதல்வர் சரியான நபரை தான் இந்த துறைக்கு தேர்ந்தெடுத்ததாகவும் நாங்கள் பெருமை கொண்டுள்ளோம் என்றும் கூறினார் .

மேலும் முத்தமிழ் அறிஞர் பல்வேறு நலத்திட்டங்களை தமிழக மக்களுக்காக வழங்கி உள்ளதாகவும் அதை பின்பற்றி தற்போது உள்ள தமிழக முதல்வர் மகளிருக்காக பல்வேறு நலத்திட்டங்களையும் ஏழை எளியவர்களுக்கு உதவும் மனப்பான்மையுள்ள முதல்வராக வாழ்ந்து வருவதாகவும்,

நாடாளுமன்றத் தேர்தலில் முதல்வரின் கரத்தை வலுப்படுத்த வேண்டும் அதற்கு நாம் முழுமையாக உழைக்க வேண்டும் என எடுத்துரைத்தார்.

மேலும் இந்த பொதுக் கூட்டத்தில் மாநகர செயலாளர் மதிவாணன் , தலைமை செயற்குழு உறுப்பினர் கே.என்.சேகரன் துணை மேயர் திவ்யா மாவட்ட துணைச் செயலாளர்கள் செங்குட்டுவன், லிலாவேலு மூக்கன் சந்திரமோகன், பகுதி கழகச் செயலாளர் தர்மராஜ், சிவா ஒன்றிய கழகச் செயலாளர் கங்காதரன் உட்பட கழக நிர்வாகிகள் தொண்டர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்களின் மக்கள் பணியால் ஈர்க்கப்பட்டு , உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி முன்னிலையில் திருக்கோயிலூர் சட்டமன்றத் தொகுதி , திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியம், மழவராயனூர் ஊராட்சியில் மாற்றுக் கட்சியினர் ஊராட்சி மன்றத் தலைவர் லதா ஏழுமலை தலைமையில் காமாட்சி, ராஜேஸ்வரி, சத்யா, சங்கமம்மா, சக்திவேல், வினோத்குமார், பானு, அருண், சோமேஷ், பழனியம்மா, பாரதி, பிருந்தா, பைரவி, சரண்ராஜ், வனிதா ஆகியோருடன் 100 க்கும் மேற்பட்டோர் கழகத்தில் இணைந்தனர். மாவட்ட செயலாளர் நா.புகழேந்தி எம். எல். ஏ, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். இரா. இலட்சுமணன், மாவட்டப் பொருளாளர் இரா ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக் குழு இணைச் செயலாளர் செ. புஷ்பராஜ், ஒன்றியச் செயலாளர் பி.வி.ஆர்.விசுவநாதன், ஒன்றிய குழுத் தலைவர் ஓம் சிவ சக்திவேல், பேரூர் செயலாளர் பூக்கடை கணேசன், பொதுக்குழு பக்தவச்சலம் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## இரா.காழிகலைவாணன் தலைமை!

# மயிலாடுதுறை மாவட்டப் பொறியாளர் அணி சார்பில் பேச்சுப் போட்டி!

### நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ பரிசுகளை வழங்கினார்! எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. - துரை.கி.சரவணன் பங்கேற்பு!

நாகை.அக்.19.

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி சார்பில் கலைஞர்நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பொறியியல் மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி சீர்காழியை அடுத்த புத்தூர் சீனிவாச சுப்பராய பாலிடெக்னிக் கல்லூரியில் நடைபெற்றது. பேச்சுப் போட்டி தொடக்க மற்றும் பரிசளிப்பு விழாவிற்கு சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் கொள்ளிடம் மேற்கு செல்லசேதுரவிக்குமார், கொள்ளிடம் கிழக்கு மலர்விழிதிருமாவளவன், மாவட்டப் பொறியாளர் அணி தலைவர் ஆர்.ஆர். ரமேஷ், துணை அமைப்பாளர்கள் ஆர்.கார்த்திகேயன், எம்.நிக்கேஷ், கே. இளம்பருதி, எஸ்.ஜெயச்சந்திரன், வி.சந்திரக்குமார் எம்.ஜெமிம், எஸ். சிற்றரசன், ஆர். சீத்தாராமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் இரா. காழிகலைவாணன் வரவேற்றார். பேச்சுப்போட்டியை முன்னாள் உறுப்பினரும், மாநில பொறியாளர் அணி தலைவர் துரை.கி.சரவணன் போட்டியை தொடங்கி வைத்தார். விழாவிற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கி போட்டியில் வெற்றிப் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பதக்கம் மற்றும் சான்றிதழ்களை வழங்கியும், கலந்து கொண்ட மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கி சிறப்புரையாற்றினார். மாணவர்களுக்கான போட்டியில் தொழில்நுட்பக் கல்விக்குத் தோள் கொடுத்த கலைஞர், தொழில் துறையை உயர்த்திய தமிழினத் தலைவர், திராவிட மாடலும், திறன் மிக்கக் கல்வியும், தெற்குச் சூரியன், கலைஞரும், தமிழும் என்ற தலைப்பில் பேச்சுப்போட்டிகள் நடத்தப்பட்டது போட்டியின் நடுவர்களாக தலைமைக் கழக பேச்சாளர் கோமல் விஜய்அறிவழகன், பேராசிரியர் வன்மீகவெங்கடாச்சலம், தலைமைக் கழக பேச்சாளர் சி.அருள்தாஸ் ஆகியோர் போட்டிகளை நடத்தினார்கள். நிகழ்ச்சியில் சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் கி.சத்தியசீலன், மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன் துணைச் செயலாளர் கண்ணகிபன்னீர், பொருளாளர் மகா. அலெக்சாண்டர், பொதுக் குழு உறுப்பினர் பி.கென்னடி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஏ.ஜி. ஜெ.பிரபாகரன், பஞ்சு. குமார், ஞான.இமையநாதன், என்.இளையபெருமாள், ப.முருகமணி, மூவலூர் எம்.மூர்த்தி, மங்கை எம்.சங்கர், ஏ.ஆர்.ராஜா, கு.வைத்தயநாதன், பி.எம். அன்பழகன், எம்.அப்துல் மாலிக், சீர்காழி நகரக் கழகச் செயலாளர் ம. சுப்பராயன், தரங்கம்பாடி பேரூர் செயலாளர் முத்துராஜா கொள்ளிடம் ஒன்றியக் குழுதலைவர் ஜெயபிரகாஷ், சீர்காழி நகர்மன்ற தலைவர் துர்கா பரமேஷ்வரிராஜசேகர், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் சௌமியன், எஸ்.முருகன், முத்துகுபேரன், புத்தூர் சீனிவாச சுப்பராய பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் குமார், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் தியாக.விஜயேஸ்வரன், விஜயபாரதிகென்னடி, எஸ்.சுரேஷ், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் முடிவில் மாவட்டப் பொறியாளர் அணி துணைத் தலைவர் ஜி.பி. காத்திகேயன் நன்றி கூறினார்.

## குமாரபாளையம் நகர முன்னாள் செயலாளர் தி.கு.சண்முகம் மறைவு!

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

சென்னை,அக்.19–

நாமக்கல் மேற்கு மாவட்டம், குமாரபாளையம் நகரக் கழக முன்னாள் செயலாளரும், குமாரபாளையம் பேரூர்க் கழக முன்னாள் செயலாளரும், பள்ளிப் பாளையம் ஒன்றியக் கழக முன்னாள் செயலாளரும், ஒருங்கிணைந்த சேலம் மாவட்டக் கழக முன்னாள் துணைச் செயலாளருமான தி.கு.ச. என்கிற தி.கு.சண்முகம் அவர்கள் நேற்று முன்தினம் (17.10.2023) இயற்கை எழுதினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் கழகத் தலைவர்-முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரின் குடும்பத்தாருக்குத் தெரிவித்துள்ளார்.

## தி.மு.க. விவசாய அணி

# கோவை மண்டலத்திற்குட்பட்ட மாவட்ட (ம) மாநகர தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம்!

### விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க மாவட்டந்தோறும் “தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா”வினை தி.மு.க. விவசாய அணி கொண்டாடவிருப்பதையொட்டி, அது குறித்து கலந்தாலோசிக்க,

கோவை மண்டலத்திற்குட்பட்ட “தி.மு.க. விவசாய அணி மாவட்ட மற்றும் மாநகர தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம்” தி.மு.க. விவசாய அணித் தலைவர் என்.கே.கே.பெரியசாமி, தி.மு.க. விவசாய அணி துணைத் தலைவர் இரா.தமிழ்மணி, தி.மு.க. விவசாய அணி இணைச் செயலாளர்கள் கள்ளிப்பட்டி மணி, குறிஞ்சி என்.சிவகுமார், எல்.பி.தர்மலிங்கம், ஆகியோர் தலைமையில், ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சு.முத்துசாமி, தி.மு.க. உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தி.மு.க. ஆதிதிராவிட நலக்குழு துணைத் தலைவர் அமைச்சர் டாக்டர். மா.மதிவேந்தன், தி.மு.க. மகளிர் அணி துணைச் செயலாளர் அமைச்சர் கயல்விழி செல்வராஜ், ஆகியோர் சிறப்புரையாற்றிட 26.10.2023 (வியாழக்கிழமை), காலை 11. 00 மணியளவில் வால்பாறை, காமராஜர் நகர், எண். 8/258, குட் லக் விடுதியில் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தி.மு.க. விவசாய அணியின் மாவட்ட (ம) மாநகர தலைவர், துணைத் தலைவர்கள் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

*“அண்ணா அறிவாலயம்”*
*சென்னை 600 018.*
*நாள்: 17-10 - 2023.*

**ஏ.கே.எஸ்.விஜயன்**
*செயலாளர்*
*தி.மு.க. விவசாய அணி*



நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு நகராட்சி 14 வது வார்டு அ.தி.மு.க. கவுன்சிலர் டி.கே.ஜி ராஜா தலைமையில் 50 க்கும் மேற்பட்டோர் அக்கட்சியிலிருந்து விலகி நாமக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். இந்நிகழ்ச்சியில் திருச்செங்கோடு நகர கழகச் செயலாளர் தா.கார்த்திகேயன், தலைமைக் கழகச் செயற்குழு உறுப்பினர் ஆர்.நடேசன், நகர மன்ற தலைவர் நளினி சுரேஷ்பாபு, நாமக்கல் மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் சுரேஷ் பாபு மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள், மகளிர் அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டக் கழகப் பொறியாளர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பொறியியல் கல்லூரி கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி சீர்காழியை அடுத்த புத்தூர் சீனிவாச சுப்பராய பாலிடெக்னிக் கல்லூரியில் நடைபெற்றது. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு மயிலாடுதுறை மாவட்ட கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ பரிசுகள், சான்றிதழ்கள், பதக்கங்களை வழங்கினார். உடன் சட்ட மன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்வம், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் கி.சத்தியசீலன், பொறியாளர் அணி மாநில தலைவர் துரை.கி.சரவணன், மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன், ஒன்றியச் செயலாளர்கள் மலர்விழிதிருமாவளவன், செல்லசேதுரவிக்குமார், ஏ.ஜி.ஜெ.பிரபாகரன், பஞ்சுகுமார், என்.இளையபெருமாள், ஞான.இமையநாதன், சீர்காழி நகரக் கழக செயலாளர் ம.சுப்பராயன், சீர்காழி நகர்மன்ற தலைவர் துர்காபரமேஸ்வரிராஜசேகரன், மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் இரா.காழிகலைவாணன் மற்றும் பொறியாளர் அணி மாவட்ட நிர்வாகிகள் உள்ளனர்.

# குமாரபாளையம் நகரக் கழக முன்னோடி தி.கு.சண்முகம் மறைவு!

### அமைச்சர் மா.மதிவேந்தன் - எஸ்.எம்.மதுரா செந்தில் அஞ்சலி!



நாமக்கல், அக்.19 -

குமாரபாளையம் கழக முன்னோடி தி.கு.ச (எ) தி.கு.சண்முகம் அவர்கள் நேற்று முன்தினம் (17.10.2023) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த சண்முகம் உடலுக்கு வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில் மற்றும் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த சண்முகம் 1965 முதல் 1972 வரை குமாரபாளையம் பேரூர் கழக செயலாளர், 1972 முதல் 1979 வரை பள்ளிபாளையம் ஒன்றிய கழக செயலாளர், 1979 முதல் 1983 வரை குமாரபாளையம் நகரக் கழக செயலாளர், 1983 முதல் 1997 வரை ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட தி.மு.க. துணை செயலாளர், 2004 முதல் 2009 வரை ஒருங்கிணைந்த நாமக்கல் மாவட்ட தி.மு.க. துணை செயலாளர், 1996 ல் குமார பாளையம் நகர கூட்டுறவு வங்கி தலைவர், 2004 முதல 2009 வரை ஒருங்கிணைந்த நாமக்கல் மாவட்ட அவை தலைவர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளை வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



நாகை மாவட்டம் வேளாங்கண்ணி கடற்கரையில் புதிதாக கட்டப்பட்டுள்ள நியாய விலைக் கட்டிடத்தை நாகை மாவட்டக்கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன், நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ஜானிடாம்வர்கீஸ், கீழ்வேளூர் சட்ட மன்ற உறுப்பினர் நாகைமாலி, கீழையூர் ஒன்றியக் கழகச் செயலாளர் ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன், வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரியசார்லஸ், வேளாங்கண்ணி பேரூராட்சி தலைவர் டயானாஷர்மிளா மற்றும் பலர் உள்ளனர்.